செ.வெ.எண்: 24 நாள்: 18.04.2017

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மற்றும் தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (18.04.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்லங்குறிச்சி ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியை ஆய்வு செய்து, அவ்விடுதியிலுள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் ஏற்பட்டுள்ள பழுது மற்றும் விடுதியின் சமையலறையை சுத்தமாக பராமரித்திடவும் அவ்வறைக்கு கலர் வண்ணம் பூசிடவும், விடுதியில் மழைநீர் சேகரிப்பு தொட்டி உடனடியாக அமைத்திடவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து எருத்துகாரன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் புதியதாக சிறுவர் பூங்கா அமைக்கப்படவுள்ள இடத்தை பார்வையிட்டு, பூங்காவிற்கு தேவையான உபகரணங்கள், குடிநீர், சுற்றுச்சுவர் மற்றும் மின் விளக்கு வசதி ஆகியவை ஏற்படுத்திட அலுவலர்களுக்கு அறிவுருத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தா.பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளாய் கிணறு மூலம் அப்பகுதி பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திடவும், இவ்ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கழிவறை கட்டிடங்கள் கட்டிடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், கோடைக்காலங்களில் கால்நடைகளுக்கு தண்ணீர் கிடைத்திடும் பொருட்டு அம்பாபூர் ஊராட்சிக்குட்பட்ட விக்கிரமங்கலம் மற்றும் உல்லியக்குடி கிராமத்தில் கால்நடைப் பராரிப்புத் துறையின் சார்பில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளாய் கிணறுகள் மூலமாக கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிகளையும் பார்வையிட்டார்.

மேலும், உல்லியக்குடி கிராமத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள உபரிநீர் செல்லும் வாய்க்கால் பணியினையும் பார்வையிட்டு, அனைத்து பணிகளும் சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்கள் விரைந்து முடித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இவ்வாய்வின்போது உத்தரவிட்டார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.லோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.பழனிசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.ஹேமலதா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பிரபாகரன், திரு.ராஜேந்திரன் (அரியலூர்), திரு.ராஜா, கலையரசன் (தா.பழூர்), பொறியாளர்கள் திரு.எலரா, திரு.கமலகண்ணன் மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.